# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) இந்தோ-சீனாவில் நடைபெற்ற 'வெள்ளை பயங்கரம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

**பதில் :** 1. 1929 இல் வியட்நாம் வீரர்கள் ராணுவப் புரட்சி செய்தனர்.
2. பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான முயற்சி தோல்வியடைந்தது.
3. இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சி நடைபெற்றது.
4. இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து "வெள்ளை பயங்கரவாதம்" (White Terror) என்பது அரங்கேறியது.
5. அதில் புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

2) முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?

**பதில் :** 1. 1922 அக்டோபரில் ஒரு நீண்ட அமைச்சரவைச் சிக்கலின் போது முசோலினி பாசிஸ்டுகளின் மாபெரும் அணிவகுப்பு ஒன்றை ரோமாபுரியை நோக்கி நடத்தினார்.
2. முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.

3) பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

**பதில் :** 1. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.
2. வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது. ஆனால் விவசாயிகள் நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை.
3. விவசாய பொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்தவேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று.
4. விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது.

4) “டாலர் ஏகாதிபத்தியம்” – தெளிவுபட விளக்குக

**பதில் :** டாலர் ஏகாதிபத்தியம்: இச்சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றிய கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

5) மன்றோ கோட்பாட்டை விளக்குக.

**பதில் : மன்றோவின் கோட்பாடு:**
(i) அமெரிக்கக் குடியரசு தலைவர் மன்றோ தனது புகழ்பெற்ற மன்றோ கோட்பாட்டை முன் வைத்தார்.
(ii) அமெரிக்காவின் எந்த பகுதியிலும் அது வடக்கோ தெற்கோ ஐரோப்பியர்கள் தலையிட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கெதிரான போராக கருதப்படும் என அறிவித்தது
(iii) இப்பயமுறுதல் ஐரோப்பியர்களை அச்சங்கோள்ள வைத்து அவர்களை தென் அமேரிக்கா விவரங்களிலிருந்து விலகியிருக்கச் செய்தது

6) 1884-85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக

**பதில் :** 1. 1884-1885 ஆண்டுகளில் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டில் காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.
2. ஆனால் ஆங்கிலேயருக்கும் தென்னாப்பிரிக்க போயர்களுக்கும் இடையே நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிரான செயலாகும்.

7) ஸ்மட்ஸ்-ஹெர்சாக் உடன்படிக்கைக்கானக் காரணங்களை விளக்குக.

**பதில் : ஸ்மட்ஸ்-ஹெர்சாக் உடன்படிக்கைக்கானக் காரணம்:**
(i) நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்து வைக்க ஒரு கூட்டணி அரசு தேவையென ஸ்மட்ஸ் நம்பினார்.

ஆகவே 1934 இல் தென்னாபிரிக்கக் கட்சியும் தேசியக்கட்சியும் இணைந்து சவுத் ஆப்ரிக்கா பார்ட்டி சுருக்கமாக எதிர்க்கட்சி உருவானது

(ii) தவறான புரிதல்களும் கருத்து வேற்றுமைகள் இருந்தபோதிலும் ஸ்மட்ஸ்-ஹெர்சாக் கூட்டணி 1939 வரை நீடித்தது

8) அமெரிக்காவில் ஏற்பட்ட பங்குச்சந்தையின் வீழ்ச்சிபற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக

**பதில் :** (i) அமெரிக்க முதலீடுகள் திரும்பப் பெறப்பட்டதால் ஏற்பட்ட சிக்கலான சூழ்நிலை 1929 இல் ஏற்பட்ட பங்குச்சந்தையின் வீழ்ச்சி மேலும் மோசமாக்கியது

(ii) முதல் பெரும் வீழ்ச்சி 1929 ஆம் ஆண்டு அக்டோபர் 24இல் அரங்கேறியது. அன்றைய தினம் நியூயார்க் நகரப் பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் செங்கத்தாக வீழ்ந்தன

(iii) நம்பிக்கை இழந்த முதலீட்டாளர்களும், வாடிக்கையாளர்களும் ஏனைய மக்களும், பங்குகளை விற்கத் துவங்கினர். இருப்பில் இருந்தனவற்றையும் விற்றுத் தீர்க்கத் தலைப்பட்டனர் ஆனால் அத்தனை வாங்குவதற்கு யாருமில்லை

9) பாசிஸம் - குறிப்புத் தருக

**பதில் :** (i) பாசிஸம் என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும்

(ii) சர்வாதிகார வல்லமையும் எதிர்ப்பை வன்முறை கொண்டு அடக்குவதும் சமூகத்தையும், பொருளாதாரத்தையும் வலுவான மத்திய அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதும் இதன் பண்புகளாகும்

(iii) இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஐரோப்பாவில் முக்கியத்துவம் பெற்றது

10) மத்திய அமெரிக்காவின் ஐந்து குடியரசு நாடுகள் யாவை?

**பதில் :** மத்திய அமெரிக்காவை ஐந்து குடியரசுகளாகப் (கோஸ்டொரிக்கா, எல் சால்வடார், கவுதமாலா, ஹாண்டு ராஸ், நிகராகுவா) பிரிந்தது

11) நல்ல அண்டை வீட்டுக்காரன் - குறிப்பு தருக

**பதில் :** 1933க்குப் பின்னர் அமெரிக்காவின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் தன்னுடைய நல்ல அண்டை வீட்டுக்காரன் கொள்கையில் அமெரிக்கா வேறு எந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடாது என்று கூறியதோடு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குப் பொருளாதார தொழில் நுட்ப உதவிகளைச் செய்யவும் ஒத்துக் கொண்டது

12) ஹைதி பிரான்ஸ் காலனியர் கட்டுப்பாடுகளை தூக்கி எறிந்த முதல் கரீபிய நாடு - விளக்கவும்

**பதில் :** (i) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசியல் சுதந்திரம், நிர்வாக சுயாட்சி, பொருளாதார சுயாதிபத்திய உரிமை ஆகிய கோரிக்கைகள் லத்தீன் அமெரிக்கா முழுவதும் பரவியது

(ii) ஹைதி நாட்டின் அடிமைகள், காலனி மக்கள் ஆகியோருக்கும் ஆங்கிலேய பிரெஞ்சு காலனி ஆதிக்க சக்திகளின் படைகளுக்குமிடையே கொடூரமான போர்கள் நடைபெற்றன

(iii) 1791-1804 காலப்பகுதிகளில் தௌசெயிண்ட் லுவெர்தூரி என்பவரின் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டங்கள் பிரான்சின் காலனியாதிக்க கட்டுப்பாட்டிலிருந்து ஹைதி மக்கள் விடுதலை பெறுவதில் முடிந்தது. இவ்வாறு ஹைதி, அடிமை முறையையும் பிரான்சின் காலனியர்கள் கட்டுப்பாடுகளையும் பிரான்சின் காலனியர் கட்டுப்பாடுகளையும் தூக்கியெறிந்த முதல் கரீபிய நாடாகும்

13) இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிசம் எழுச்சி பெறக் காரணமென்ன?

**பதில் :** 1. முதல் உலகப்போர் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை அடித்தளமாகக் கொண்ட உலக முதலாளித்துவ முறையைத் தகர்த்தது.

2. இப்போரினால் ஐரோப்பிய நாடுகள் அரசியல் ரீதியாகவும் நிதிசார்ந்த வகையிலும் கவலைக்குரிய அளவிற்கு தளர்வடைந்து வலிமை குன்றின.

3. வர்த்தகங்களுக்கிடையிலான முரண்பாடுகளும், தொழிலாளர்களுக்கும், அரசைக் கட்டுப்படுத்திய ஆளும் வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளும் தீவிரமடைந்தன.

4. இதன் விளைவாக இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிசம் எழுச்சி பெற்றது.

14) காலனிய நீக்கம் என்றால் என்ன?

**பதில் :** காலனிய நீக்கம் என்பது காலனி ஆதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்டம் சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

15) போயர்கள் என்போர் யாவர்?

**பதில் :** தென்னாப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக்குடியேறிகளின் வம்சாவளியினரே ஆப்பிரிக்கநேர்கள் என்று அழைக்கப்பட்ட போயர்கள் ஆவர். இவர்களது மொழி ஆப்பிரிக்கான்ஸ் என்பதாகும்.

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 4 x 5 = 20

16) ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.

**பதில் : ஹிட்லர் ஜெர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்:**

1. 1919ஆம் ஆண்டு ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது ஜெர்மன் உழைப்பாளர் கட்சி எனப்படும் நாசிசக் கட்சியை உருவாக்கியது. ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார்.
2. அவர் முதல் உலகப்போரின்போது பவேரியாவின் படையில் பணியாற்றினார்.
3. 1923 இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற ஹிட்லர் முயற்சி மேற்கொண்டார்.
4. மியூனிச் நகரில் முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட தேசியப்புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது.
5. சிறையில் இருந்தபோது தனது சுயசரிதை நூலான மெயின் காம்ப் (Mein Kampf - எனது போராட்டம்) எனும் நூலை எழுதினார்.
6. 1932 இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் தவறான வழியில் ஜெர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

**ஹிட்லரின் நாசிச ஆட்சி:**

1. ஜெர்மனியில் குடியரசு ஆட்சி கவிழ்ந்ததின் விளைவாகத் தொழிலதிபர்களும், வங்கியாளர்களும் குடியாட்சிக் கட்சியினரும் ஹிட்லரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் 1933 இல் ஹட்லரை சான்சிலராக (முக்கிய அமைச்சர்) பதவியில் அமர்த்தும்படி குடியரசுத் தலைவர் வான் ஹின்டென்பர்க்கை வற்புறுத்தினர்.
2. மூன்றாவது ரெய்க் (குடியரசு) என்று அழைக்கப்பட்ட ஹிட்லரின் நாஜிஅரசு ஜெர்மனியில் நிறுவப்பட்டிருந்த பாராளுமன்ற ஜனநாயக அரசை முடிவுக்குக் கொண்டுவந்தது.

**ஹிட்லர் மேற்கொண்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகள்:**

1. ஹிட்லர் வெய்மர் குடியரசின் கொடிக்குப் பதிலாக ஸ்வஸ்திக் சின்னம் பொறிக்கப்பட்ட தேசிய சோசியலிசக் கட்சியின் கொடியை அறிமுகம் செய்தார்.
2. நாசிச கட்சியைத்தவிர பிறகட்சிகள் அனைத்தும் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டது.
3. ஹிட்லர் இளைஞர் அணியும், தொழிலாளர் அமைப்பும் நிறுவப்பட்டன.
4. தொழிற்சங்கங்கள் ஒழிக்கப்பட்டன.
5. பத்திரிக்கைகள், அரங்குகள், திரைப்படங்கள், வானொலி, கல்வி ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.
6. யூதர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைக் கொள்கை பின்பற்றப்பட்டது.
7. 1934 ஆம் ஆண்டு ஹின்டென்பர்க் மறைவிற்குப்பின் சான்சிலராக இருந்த ஹிட்லர் குடியரசுத் தலைவராகவும் ராணுவத்தின் தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்றார்.

17) உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்

**பதில் : மாகாணங்களில் இரட்டையாட்சி:**

1. இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடானது 1905 ஆம் ஆண்டு சுதேசி இயக்கத்தோடு துவங்கியது.
2. 1919 இல் இந்திய அரசுச் சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது.
3. அச்சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சட்டசபைகளுக்கும் மாற்று அதிகாரங்களின் பட்டியலின் கீழ் வரும் சில துறைகளை இந்திய அமைச்சர்களே நிர்வகிக்கவும் வழிவகை செய்தது.
4. இந்திய தேசிய காங்கிரஸ் இரட்டையாட்சி தொடர்பான ஏற்பாடுகளை மறுத்ததோடு சட்டசபைகளைப் புறக்கணிக்க முடிவு செய்தது.

**தொழில்மயமாக்குதலில் குறைபாடுகள்:**

1. உள்நாட்டுத் தொழில்களைப் பொறுத்தமட்டில் தொழில் நுட்பம் சார்ந்த அறிவுரைகளும், கல்வி வழங்குதல், புதிய துறைகள் தொடர்பான முன்னோடித் தொழில் கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் மட்டுமே அரசு உதவிகள் செய்தது.
2. ஆனால் ஆங்கில நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால் வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

**பொருளாதாரப் பெருமந்தத்தின்போது இந்தியா:**

1. உள்நாட்டுத் தொழில்களைப் பொறுத்தமட்டில் தொழில் நுட்பம் சார்ந்த அறிவுரைகளும், கல்வி வழங்குதல், புதிய துறைகள் தொடர்பான முன்னோடித் தொழில் கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் மட்டுமே அரசு உதவிகள் செய்தது.
2. ஆனால் ஆங்கில நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால் வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

**பொருளாதாரப் பெருமந்தத்தின்போது இந்தியா:**

1. 1929 ஆம் ஆண்டு பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கிலேய வணிக வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பெரும் சேதத்தை உண்டாக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
2. இங்கிலாந்து பெருமந்தத்தின் தீய விளைவுகளைத் தனது காலனிய நாடுகளின் தோள்களுக்கு மாற்றியது.
3. 1932 இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டு பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒப்புக்கொண்டன.
4. இந்திய அரசு பின்பற்றிய அந்நியச் செலவாணி மாற்றுக் கொள்கை காலனி அரசுக்கும் மக்களுக்குமிடையே பதற்றமான நிலை ஏற்படுத்தியது. இது ஆங்கில அரசுக்கு எதிரான அரசியல் போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது.

**இந்திய வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்திய தாக்கம்:**

1. பொருளாதாரப் பெருமந்தத்தினால் வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.
2. ஆனால் விவசாயிகள் நிலத்திற்கு கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை.
3. விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டு பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத்தூண்டியது.

**1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்:**

1. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.
2. இச்சட்டத்தின் அடிப்படையில் 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது.
3. இருந்தபோதிலும் காங்கிரஸ் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்யும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

18) தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

**பதில் :** 1. தென்னாப்பிரிக்காவில் இரு முக்கிய அரசியல் கட்சிகள் செயல்பட்டன. அவை பெரும்பாலும் ஆங்கிலேயர்களைக் கொண்ட யூனியனிஸ்ட் கட்சி மற்றும் ஆப்பிரிக்கநேர்ஸ் என்றழைக்கப்பட்ட போயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த தென்ஆப்பிரிக்கக் கட்சி.
2. முதல் பிரதம மந்திரியான போதா, தென்ஆப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்தவர். அவர் ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார்.
3. ஆனால் தென்னாப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த போராடும் குணமிக்க ஒரு பிரிவினர் ஹெர்சாக் என்பவரின் தலைமையின் கீழ் தேசியக் கட்சி எனும் கட்சியைத் தொடங்கினர்.
4. 1920ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசியக் கட்சி 44 இடங்களைக் கைப்பற்றியது. தென்னாப்பிரிக்கக் கட்சி ஸ்டீட்ஸ் என்பாரின் தலைமையில் 41 இடங்களில் வெற்றி பெற்றது.
5. இத்தருவாயில் ஆங்கிலேயர்கள் அதிகமிருந்த யூனியனிஸ்ட் கட்சி தென்னாப்பிரிக்கக் கட்சியுடன் இணைந்தது.
6. இதனால் போர்க்குணம் கொண்ட ஆப்பிரிக்கநேர்களின் கட்டுப்பாட்டில் இருந்த தேசியக் கட்சியைக் காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மை பெற்றார்.

19) முசோலினியின் கீழ் பாசிஸ்டுகள் என்ற கூற்றினை விளக்கி எழுதவும்.

**பதில் :** (i) இத்தாலியில் 1924 ஆம் ஆண்டுத்தேர்தலில் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்ட பின்னர் பாசிஸ்டுகளுக்கு ஆதரவாக 65 விழுக்காடு வாக்குகள் பதிவாகியிருந்தன

(ii) சோசலிஸ்டுகளின் தலைவரான மாட்டியொட்டி தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைபெறவில்லை. எனக் கேள்வி எழுப்பியதால் அவர் கொலை செய்யப்பட்டார்

(iii) இதற்கு எதிப்புத் தெரிவிக்கும் பொருட்டு எதிர் கட்சியினர் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தனர். இதன் விளைவாக முசோலினி எதிர்கட்சிகளைத் தடை செய்து பத்திரிக்கைகளைத் தணிக்கைக்கு உட்படுத்தினார்

(iv) எதிர்க்கட்சி தலைவர்கள் கொல்லப்பட்டனர் அல்லது சிறைவைக்கப்பட்டனர். 1929 இல் இரண்டாம் டியூஸ் (தலைவர்) எனும் பட்டத்தைச் சூட்டிக் கொண்ட முசோலினி சட்டங்களை இயற்றும் அதிகாரத்துடன் சர்வாதிகாரியானார்.

(v) வேலை நிறுத்தங்களையும் ஆலை மூடல்களையும் தடைசெய்து சட்டங்கள் இயற்றினார். தொழிற்சங்களும், தொழிற்சாலை முதலாளிகளும் இடம் கழகங்கள் உருவாக்கப்பட்டன

இவ்வமைப்பு ஊதியம் வெளியிட நிலைமைகள் ஆகியவை குறித்து முடிவு செய்யும். மீதியுள்ள மக்களில் பெரும் பகுதியினர் அவர்கள் செய்து வரும் பனியின் அடிப்படையில் பல கழகங்களாக ஒருங்கிணைக்கப்பட்டனர்

(vi) இக்கழகங்கள் பின்னர் தேசியக்கூட்டமைப்புகளாக ஆக்கப்பட்டு கழகங்களுக்கான அமைச்சரின் பாராளுமன்றம் ஒழிக்கப்பட்டு அதற்கு மாற்றாகப் பாசிஸ்டுக் கட்சியின் மற்றும் கழகங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பொன்று உருவாக்கப்பட்டது

(vii) இவ்வேறுபாடு பொருளாதாரத்தின் மீதான முசோலியின் சர்வாதிகாரக்கட்டுபாட்டுக்கு துணை நின்றதுடன் நிர்வாகம் மற்றும் ஆயுதப்படைகளின் தலைவராக மற்றபிற அதிகாரத்தைச் செயல்படுத்தவும் அவருக்கு உதவியது